# JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
# DEPOSITION OF WITNESS

DVC.No. 9/2021 Date: 29.12.2022 P.W.1

பெயர் ° சங்கீதா

தந்தை /கணவர் பெயர் ° சக்திவேல்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 29th day of December 2022

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபட்ட சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.

எனக்கும் எதிர் மனுதாராரருக்கும் திருமணம் என்னுடை தாய் மாமா சீனிவாசன் என்பவரால் வரன் பார்க்கப்பட்டது என்றால் சரிதான். திருமணத்தின் போது என்னுடைய வயது 19 என்றால் சரியல்ல 21 வயது. ரூ.2 லட்சம் பணம் ரொக்கமாக திருமணத்திற்காக கொடுத்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 280 கிராம் தங்க நகைகள் திருமணத்திற்கு போட்டதாக நான் கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. 35 சவரன் நகை என்னுடைய திருமணத்திற்கு போடப்பட்டது. என்னுடைய திருமணத்திற்கு எனக்கு 13 சவரன் தங்க நகையும், என்னுடைய கணவர் சக்திவேலுக்கு 5 சவரன் நகை போடப்பட்டது என்றால் சரியல்ல. 6 1/4 சவரன் கேடியம் தங்க நகை என்னுடைய கணவருக்கு போட்டார்கள். மேற்படி நகைகளுக்கான ரசீதுகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2014ம் ஆண்டு என்னுடைய தாய் வீட்டில் வீட்டை புதுப்பித்து வீடு காட்டினார்கள் என்றால் சரிதான். மேற்படி வீடு கட்டிய போது என்னுடைய நகைகளை கொடுத்து வீட்டு கட்டுவதற்கு உதவி செய்தேன் என்றால் சரியல்ல. நான் அங்கு செல்லவே இல்லை. என் அம்மா வீட்டில் வீடு கட்டி முடித்த பிறகு என் கணவரை தனி குடுத்தனம் செல்வதற்காக என் அம்மா வீட்டிற்கு அருகில் நல்ல வீடு வசதி உள்ளது என்று அழைத்தேனா என்றால் இல்லை. சக்திவேலின் அண்ணன் திருமணமாகி அப்பா அம்மாவுடன் இல்லாமல் தனி குடுத்தனம் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. நானும் அதேபோல் என் கணவரை தனி குடுத்தனம் வாழ்வதற்கு அழைத்தேன் என்றால் சரியல்ல. 2009 முதல் 2016 வரை என் மாமானார் மாமியார் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார்கள் என்றாலும், நான் அவர்களுக்கு நோய்வாய் பட்டு பணிவடை செய்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மாமானாருக்கு பக்கவாதம் வந்து சிகிச்சை எடுத்துக் கொ்ணடார். எந்த காலக்கட்டத்தில் என்னுடைய மாமானாருக்கு பக்கவாதம் ஏற்பட்டது என்றால் என் குழந்தை 2, 3 வருடங்கள் கழித்து அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது. என் கணவர் என்னை சரிவர கவணித்து கொள்ளாமல் என் மீது எதற்கு எடுத்தாலும் எரிச்சல் படுவதும், என் தோற்றத்தை கேவளாமாக பேசவதும், கையில் கிடைத்த பொருளை என் மீது வீசவதும், அவரின் தவறான போக்குகளை நான் தட்டி கேட்டால் கணவனை எதிரித்து பேசிகிற அளவுக்கு இருக்கிறாயா என்று தன்னை தரக்குறைவாக பேசியதாகவும் என்று கூறியது சம்மந்தமாக என்னுடை தாய் மாமா சீனிவாசன் என்பவரை வைத்து என் கணவரிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா என்றால் இல்லை. என் தாய் மாமா என் வீட்டிற்கு வரக்கூடாது என்று என் கணவர் கூறிவிட்டார். மேற்படி சங்கதிகள் எந்த ஆண்டில் நடைபெற்றது என்று என்னால் சொல்ல இயாலது என்றால் எனக்கு குழந்தை பிறகு தான் நடைபெற்றது. நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவர் என்னை அவமானப்படுத்தி கேவளமாக பேசி துன்புறுத்தியது எந்த ஆண்டில் நடைபெற்றது என்று என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். பல பேர் முன்னிலையில் என் கணவர் என்னை துன்புறுத்தியதாக கூறியதற்கு ஆதரவாக யார் யார் முன்னிலையில் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும், நான் அவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். என் கணவர் 1 லட்சம் ரூபாய் பணம் கேட்டு நான் என் பெற்றோரிடம் இருந்து பணத்தை வாங்கி என்

கணவருக்கு கொடுத்தாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோர் யாரிடம் கடன் பெற்று என் கணவருக்கு பணம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும். எந்த கிராமத்தில் இருக்கும் நிலத்தை விற்று பணம் கொடுத்தார்கள் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் என் கணவரை தனி குடுத்தனம் நடைத்துவதற்காக வற்புறுத்தி என் கணவரிடம் மனைவியாக நடந்து கொள்ளாமல் தொல்லை கொடுத்தேன் என்றால் சரியல்ல. முருகனின் மகள் சங்கீதா என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் தாய் மாமாவின் மனைவியின் அண்ணன் மகள். நான் திருமணமாகி சென்ற போது சங்கீதா என்ற பெண்ணுக்கு 11 வயது தான் ஆகியிருந்தது என்றால் சரிதான். சங்கீதா என்ற பெண்ணின் பெற்றோர்கள் இருக்கிறார்களா என்றால் இருவருமே இறந்துவிட்டார்கள். என் கணவரும் சங்கீதா என்ற பெண்ணும் தவறாக நடந்து கொண்டதாக நான் சங்கீதாவின் பெற்றோர்களிடம் புகார் தெரிவித்தேனா என்றால் சரிதான். அவ்வாறு நான் சங்கீதாவின் பெற்றோரிடம் கூறியது பொய் என்றால் சரியல்ல. என் கணவர் நான் அவ்வாறு புகார் தெரிவித்தற்காக என்னை அடித்தார். என் கணவரும் சங்கீதா என்பவரும் தகாத உறவில் இருந்தாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. என் கணவர் என்னை தற்கொலைக்கு துன்டியதாக கூறுவதும் அதற்காக நான் அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைக்களை உட்கொண்டு உடல் நிலை சரியில்லாமல் பார்வதி மருத்துவமனையில் சகிச்சை பெற்றதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் மேற்படி சிகிச்சையில் இருந்தற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் என் கணவரின் வீட்டில் இருந்தது. என்னுடை மாமியார் எந்த ஆண்டில் என்னுடைய கையில் தேநீரை ஊற்றி எனக்கு தீ காயம் ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரியல்ல. 2016 ம் ஆண்டில் மேற்படி சம்பவம் நடைபெற்றது இன்னும் என்னுடை கைகளில் தீ காய தழும்புகள் உள்ளன. மேற்படி சம்பவத்தையும் என்னுடைய தாய் மாமா சீனிவாசனை வைத்து என்னுடைய கணவரிடம் கேட்டேமா என்றால் நான் என் தாய் மாமாவிடம் கூறினேன். ஆனால் எனது கணவர் என் தாய் மாமாவை தரக்குறைவாக எந்த நாயும் என் வீட்டிற்கு வரக்கூடாது என்று கூறி அவரை வரவிடாமல் செய்தார். நேரமின்மையின் காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்தி வைக்கப்படுகிறது.

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur